பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 26 ஞாயிற்றுக்கிழமை 11.08.2024 கதிர் 277

# பெரமுன உடைந்து புதிய கட்சி உதயம்

## ரணிலுக்கு ஆதரவான எம்.பிக்களால் அடுத்த வாரத்தில் தொடங்கப்படுகிறது

ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன உடைந்து அதிலிருந்து புதிய கட்சி உருவாகவுள்ளது. வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து அவருடன் இணைந்துகொண்ட பெரமுனவின் நாடாளுமன்றஉறுப்பினர்களால்இந்தப் புதிய கட்சி உருவாக்கப்படவுள்ளது.

இதன்படி, இந்தப் புதிய கட்சி அடுத்த வாரம் தொடங்கப்படும் என பெரமுனவின்நாடாளுமன்றஉறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே உறுதிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவின் பரப்புரைக்காக 150 கூட்டங்கள் நாடாளவிய ரீதியில் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்புக்கு தொடக்கமே சத்தியசோதனை. அதைக் கொடுத்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இந்தப் பொதுக் கட்டமைப்பினரைத் தன்னோடு பேச வருமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார். அந்தச் சந்திப்புக்குப் போவதா இல்லையா என்பதில் கட்டமைப்புக்குள் தொடக்கத்திலேயே முரண்பாடுகள் தோன்றியுள்ளன.

ஏழு தமிழ் அரசியல் கட்சிகளும், தமிழ் மக்கள் பொதுச் சபையின் பிரதிநிதிகள் 7 பேரும் இணைந்து பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்தியிருந்தனர். இந்தக் கட்டமைப்பின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்படுவதற்கான வேட்பாளரும் தெரிவு செய்யப்பட்டி-ந்தார். தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் அரியநேந்திரன்ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். இதையடுத்தே பொதுக்கட்டமைப்பினரைப்பேச்சுக்கு அழைத்தார் ஜனாதிபதி. நாளை திங்கட்கிழமை சந்திப்பதற்காக இந்த அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. ஆனால் அது பின்னர் புதன்கிழமை அல்லது அதற்குப் பிந்திய நாள் ஒன்றுக்குள் மாற்றப்பட்டதாக ☞ 2

## போலி விளம்பரம்; அவதானம்

புதிய நிர்வாக ஊழியர்களை இணைத்துகொள்வதற்காக தேர்தல்கள் ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோரியுள்ளதாகத்தெரிவித்துபோலியான விளம்பரமொன்று பகிரப்படுவதாக இலங்கை கணினி அவசரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தப் போலியான விளம்பரத்தை பகிர்வதினை தவிர்க்குமாறு அதன் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சருக தமுனுபொல தெரிவித்துள்ளார்.

இதுவொரு சைபர் குற்றச்செயலாக இருக்கலாமெனவும் அதனூடாக உங்களின் தனிப்பட்ட தகவல்கள் வேறு நபர்களின் கைகளுக்கு செல்லும் அபாயம் காணப்படுவதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## ரணிலுக்கு ஆதரவில்லை ஹிஸ்புல்லாஹ் தெரிவிப்பு

ஜனாதிபதிதேர்தலில் தான் ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்கப் போகிறார் என்று சமூக ஊடகங்களில் வெளியான தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லையென கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம். எல். ஏ. எம் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர் மேலும்தெரிவித்ததாவது:

நான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் பதவியை வகிக்கிறேன். இந்நிலையில், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் எமது கட்சி எடுத்துள்ள தீர்மானத்துக்கு எதிராக ஒருபோதும் செயற்படமாட்டேன். கட்சியின் தீர்மானங்கள், கட்டுக்கோப்புகளை மீறப் போவதுமில்லை.

எமதுகட்சித்தலைவர் ரவூப்ஹக்கீமுக்குஎதிராக ஒரு போதும் ☞ 2

## ஜே.வி.பியைவிட்டால் யார்தான் மாற்றத்திற்கு தலைமையேற்பர்?

### அனுரகுமார திஸநாயக்க கேள்வி

மாற்றத்திற்கு ஜேவிபி தலைமை தாங்கவில்லை என்றால்யார்தான்தலைமை தாங்குவார்கள்?எந்தவொரு தனிப்பட்ட நலன்களுக்காகவும் நான் அரசியலைத் தெரிந்தெடுக்கவில்லைஎன்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமாரதிசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தம்புத்தேகமவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

என்னை அரசிலுக்கு அறிமுகப்படுத்தியவர்களுக்கோ அல்லது எனக்கோ அரசியல் ஊடாக எதனையும் கொண்டு செல்லமுடியாது. நான் எனது தனிப்பட்ட நலன்களுக்காக அரசியலுக்குள் வந்திருக்கவில்லை.

2019ஆம் ஆண்டு நான் முதற் தடவையாக ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கும்போது மூன்று சதவீதம்தான் வாக்குகள் இருந்தன. எனது பல்கலைக்கழக ☞ 2

### வரும் ஜனாதிபதித் தேர்தலில்

## யாரை ஆதரிப்பது என மக்கள் கருத்தறிகிறது ரிஷாத்தின் கட்சி

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஜனாதிபதி தேர்தலில் நாம் யாரை ஆதரிக்க வேண்டும் என்பது தொடர்பாக வவுனியா மக்களின் கருத்தறிவிக்கானமக்கள்சந்திப்பானது புதிய சாளம்பைக்குளம் பள்ளிவாசல் முன்றலில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது, பொதுமக்களிடம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் யாரை ஆதரிக்க வேண்டும்என்றவிடயம் தொடர்பாக மக்கள் பலரும் கருத்து தெரிவித்திருந்தனர்.

கட்சியின் பிரதி தவிசாளர் கலாநிதிமுத்து முகமதுவின் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் கட்சியின் தலைவரும்வன்னிநாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் மற்றும் முன்னாள் உள்ளூராட்சிஉறுப்பினர்கள், கட்சிஆதரவாளர்கள் பொதுமக்கள்எனபலரும் கலந்து கொண்டனர்.

## தேர்தல் வன்முறைகள் குறித்து இப்போதே 5 முறைப்பாடுகள்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக பொலிஸ் விசேட பிரிவுக்கு இதுவரை 8 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது.

தேர்தல் விதிமீறல்கள்தொடர்பில் 3 முறைப்பாடுகளும் தேர்தல் வன்முறைகள் தொடர்பில் 5 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டது.

பொதுச் சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியமை, வீதியொன்றுக்கு கொங்க்ரீட் போட்டமை, அரச அதிகாரி ☞ 2

### நல்லாட்சிக் காலத்தில் தயாரிக்கப்பட்ட

## புதிய அரசமைப்பு வரைபு பற்றிப் பேச நாமல் தயார்

### சுமந்திரன் எம்.பியை சந்தித்த போது யோசனை

மைத்திரி – ரணில் 'நல்லாட்சி' காலத்தில் இணக்கம் காணப்பட்ட புதிய அரசமைப்பு வரைவைத் தொடர்ந்து முன்னெடுப்பது குறித்து ஆராயலாம் என்று தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை நேரில் சந்தித்துப் பேசிய பொதுஜனபெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச ஒரு யோசனையை முன்வைத்துள்ளார்.

நல்லாட்சி அரசின் காலத்தில் முழு நாடாளுமன்றமுமே அரசமைப்புப் பேரவையாக மாறி இந்தப் புதிய அரசமைப்புக்கான திட்டத்தை வரைந்தது. அதுநாடாளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால், இறுதியில் அது நிறைவேற்றப்படவில்லை. மைத்திரிக்கும் ரணிலுக்கும் இடையில் உருவாகிய பிணக்குகள் காரணமாக இந்தக் கூட்டணிக்குள் ஏற்பட்ட முரண்பாடுகள், உடைவுகள், சிக்கல்களால் புதிய அரசமைப்பை உரு வாக்கக்கூடிய பெரும் பான்மை இல்லாத காரணத்தால் அது நிறைவேற்றப் படவில்லை.

நேற்று முற்பகல் கொழும்பில் நாடாளுமன்ற சுமந்திரனின் இல்லத்தில் ☞ 2

## சிவில் பாதுகாப்பு படையினரின் சேவை இன்று மறக்கடிப்பு

### கவலை தெரிவித்தார் எதிர்க் கட்சித் தலைவர் சஜித்

இலங்கையில் 32 ஆயிரம் சிவில் பாதுகாப்புப் படையினர் சேவையில் உள்ளனர். போர் வெற்றிக்காக இவர்கள் செய்த தியாகத்தை இன்று மறந்துவிட்டனர். இப்படைப் பிரிவினர்கள் ஆற்றி வந்த சேவையை வெறும் 30 இலட்சம் ரூபாயாக மதிப்பிட்டுள்ளனர். நாட்டின் படையினர்இவ்வாறுஅவமானப்படுத்தப் பட்டுள்ளனர்என்றுஎதிர்க்கட்சித் தலைவர்சஜித்பிரேமதாச தெரிவித்தார்.

சிவில் பாது ☞ 2

## நாகப்பட்டினம் கப்பல் சேவை வெள்ளோட்டம் நேற்று வெற்றி

### அடுத்த வாரத்தில் சேவை தொடங்கும்

இதோ வருகிறது, அதோ வருகிறது என்று சொல்லப்பட்ட இந்தியாவின் நாகப்பட்டினம் மற்றும் இலங்கையின் யாழ்ப்பாணத்திற்கு இடையில் பயணிகள் கப்பல் சேவையை நடத்துவதற்கான சிவகங்கை கப்பல் நேற்று தனது பரீட்சார்த்தப் பயணத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தது. அதையடுத்து அடுத்த வாரத்தில் உத்தியோகபூர்வ சேவைகள் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட் ☞ 2

## இனி இது .....

ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில், பங்கேற்குமாறு, அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் சிவில் பிரதிநிதிகள் ஏழுவருக்கும் ஜனாதிபதி செயலகத்தில் இருந்து தனித்தனியாக அலைபேசி மூலம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களாள சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சிறிகாந்தா ஆகியோர் குறித்த சந்திப்பில் பங்கேற்பர் என உறுதிப்படுத்தியுள்ளனர். அதேநேரம், சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் சிவில் தரப்பினர் சந்திப்புக்கு வருவதை உறுதிப்படத்தவில்லை. ஜனாதிபதி பேசுவதற்கு அழைத்த விடயம் சம்பந்தமான தெளிவற்ற நிலைமை காணப்படுவதால் அது குறித்து ஆராய்ந்த பின்னர் தமது முடிவை அறிவிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தியே தமிழர்களின் கோரிக்கைகளை ஜனாதிபதி வேட்பாளர்களடம் முன்வைப்பதற்குத்தான். எனவே ஜனாதிபதி ரணிலுடன் பேசவேண்டும் என்று புதுவிளக்கம் கொடுத்திருக்கிறார் ரெலோவின் பொதுச்செயலாளர் ஜனா எனப்படும் கோவிந்தம் கருணாகரன். ரணில் உட்பட ஜனாதிபதித்தேர்தலில் நிற்கும் வேட்பாளர்கள் தமிழர்களுக்கு இனப்பிரச்சினை ஒன்றே இல்லை என்ற விம்பத்தை உலகில் ஏற்படுத்துகின்றார்கள், அதனை முறியடித்து தமிழர்களுக்கு பிரச்சினை இருக்கின்றது அதற்கான தீர்வு இன்னும் முன்வைக் கப்படவில்லை என்பதை உலகத்திற்கும் சிங்களத் தலைவர்களுக்கும் வலியுறுத்தவே தமிழ் பொது வேட்பாளர் நிறுத்தப்படுகின்றார் என்று சொல்லியதை அவர் வசதியாக மறந்துவிட்டார்.

இதில் ஜனாவின் மற்றொரு விளக்கம் பொது வேட்பாளருடன் பேசி அவர்கள் தமிழ் பொதுக் கட்டமைப்பின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் பொது வேட்பாளரை நிறுத்தியது நியாயமானதே என்று மக்களிடம் சொல்ல முடியுமாம், அப்படியானால் வேட்பாளர்களுடன் பேசுவதற்கு முன்னரே அவர்கள் தீர்வைத் தரமாட்டார்கள், பொருளாதாரப் பிரச்சினை மட்டும்தான் இலங்கையில் இருக்கின்றது என்று காட்ட முற்படுகின்றார்கள் என்கிற முடிவுக்கு பொதுக் கட்டமைப்பு வந்து, பொது வேட்பாளரையும் நிறுத்தினீர்கள்?

எல்லாவற்றுக்கும் முன்பு தமிழ் பொது வேட்பாளரின் கோரிக்கை என்ன, தேர்தல் அறிக்கை என்ன என்பதெல்லாம் பொதுக்கட்டமைப்பின் உபகுழுவால் இன்னும் தீர்மானிக்கப்படாத நிலையில் ரணிலிடம் பொதுக் கட்டமைப்பின் கோரிக்கை என்று எதை முன்வைக்கப்போகிறது ரெலோ. ரணிலுக்கு விசுவாசம் இருக்கலாம்தான். அதற்காக ஓவர் விசுவாசம் உடல்நலத்திற்கு ஆகாது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பெரமுன ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்படவுள்ளதாக பெரமுனவின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்சா தரப்பினர் ஏற்கனவே அறிவித்துள்ளனர்.

## ரணிலுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான் செயற்பட போவதில்லை. தலைமைத்துவத்துடன் இணைந்து எமது முஸ்லிம் காங்கிரஸை கட்டி வளர்க்கும் பெரும் பொறுப்பை முன்னெடுத்துச்செல்வேன் என்றார்.

## நாகப்பட்டினம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது.

தமிழ்நாட்டின் நாகப்பட்டினத்தில் இருந்து நேற்றுக் காலை தனது வெள்ளோட்டத்தைத் தொடங்கிய 'சிவகங்கை' கப்பல் முற்பகலில் காங்கேசன்துறையை வந்தடைந்தது. கப்பலில் 10 பணியாளர்களும் 8 இந்திய அதிகாரிகளும் இருந்தனர். பிற்பகலில் கப்பல் நாகப்பட்டினத்திற்குத் திரும்பியது.

இந்த வெற்றிகரமான வெள்ளோட்டத்தைத் தொடர்ந்து நாளை தொடங்கும் அடுத்த வாரத்தில் உத்தியோகபூர்வமான சேவை தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. நாளை திங்கட்கிழமை சேவை தொடங்கும் என்று ஒரு தகவல் இருந்தாலும் அது குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்னும் வெளியாகவில்லை.

இந்தக் கப்பல் தனது சேவையைத் தொடங்கும் என்று இந்த ஆண்டுத் தொடக்கத்தில் எதிர்பார்க்கப்பட்டது. ஆரவரமாக அதற்கான அறிவிப்புக்களும் விடுக்கப்பட்டன. ரிக்கெற்றுக்களும் விற்கப்பட்டன. எனினும் கப்பலின் உட்கட்டுமானத் தரம் நாடுகள் இடையிலான போக்குவரத்துச் சேவையை நடத்துவதற்குத் தகுதியானதாக இல்லை என்று இந்திய அதிகாரிகள் நிராகரித்ததைத் தொடர்ந்து சேவையைத் தொடங்க முடியவில்லை. ரிக்கெட்டுக்களை வாங்கியவர்களுக்கு அதற்கான பணம் திரும்பி வழங்கப்பட்டது.

இப்போது கப்பல் திருத்த வேலைகள் செய்யப்பட்டுப் புதுப் பொலி-வுடன் போக்குவரத்துக்குத் தயாரான நிலையில் திரும்பி வந்துள்ளது. எனவே அடுத்த வாரத்தில் அது நிச்சயம் சேவையைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை அரசியல் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தியமை போன்ற தேர்தல் சட்ட விதிமீறல்கள் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸார் கூறுகின்றனர்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பவ்ரல் அமைப்புக்கு 68 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கு 32 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

## புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரைச் சந்தித்தார் நாமல். கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவாசமும் அவருடனிருந்தார். சிநேகபூர்வமான சந்திப்பாக அது இருந்தது. சுமார் ஒரு மணி நேரம் இந்தக் கலந்துரையாடல் நீடித்தது.

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் என்ற முறையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உயர் மட்டத்தினருடன் பேசும் தனது விருப்பத்தை வெளிப்படுத்தி அதற்கான நேரத்தைப் பெறும் நோக்கத்தோடு நாமல் ராஜபக்ச இந்தச் சந்திப்புக்கு வந்திருந்தார்.

இன்று ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடைபெறுகின்ற தமிழ் அரசுக்கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் நாமலின் கோரிக்கை பற்றித் தெரிவித்துக் கட்சியின் முடிவை அவருக்கு அறிவிப்பார் என்று சுமந்திரன் உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பின்போது தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்தும் கலந்துரையாடப்பட்டது. நாமலின் அப்பாவும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ச 13 பிளஸ் தொடர்பில் வழங்கிய வாக்குறுதிகள் குறித்து சுமந்திரன் சுட்டிக்காட்டியபோது, நாமல் நல்லாட்சிக் கால புதிய அரசமைப்பு முயற்சிகளைத் தொடரலாம்தானே என்கிற யோசனையை அங்கு முன்வைத்துள்ளார்.

"அந்தப் புதிய அரசமைப்பில் 13 எல்லாவற்றையும் தாண்டிச் சென்றாகிவிட்டது. அதில் தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான விடயங்களில்தான் அப்போதைய முரண்பாடுகளும் இழுபறிகளும் எமக்கு இருந்தன. அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட மற்றைய விடயங்களில் எல்லாத்தரப்புக்களும் ஒரு இணக்கத்தை எட்டியிருந்தன. எனவே அதனைத் தொடர்ந்து முன்னெடுக்கலாம்தானே" என்ற சாரப்பட நாமல் அங்கு கருத்துத் தெரிவித்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் காலைக்கதிர் பத்திரிகையிடம் தெரிவித்தார்.

அந்த அரசமைப்பு உருவாக்க முயற்சியில் சட்டம் - ஒழுங்கு தொடர்பான விடயங்களைக் கையாளும் உபகுழுவில் தான் அங்கம் வகித்தமையையும் சுட்டிக் காட்டிய நாமல் ராஜபக்ச, அந்த முயற்சியைத் தொடர்ந்து முன்னெடுத்து, புதிய அரசமைப்பு ஒன்றின் மூலம் தீர்வை நோக்கி முன்னேறமுடியும் என்கிற வாதத்தையும் முன்வைத்துள்ளார்.

இவையெல்லாம் குறித்து தான் பேசுவதற்கு வசதியாக தமிழ் அரசுக் கட்சியின் தலைவர்களுடன் ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்யும்படியும் அவர் சுமந்திரனிடம் கேட்டுள்ளார். கட்சியின் மத்திய குழுவிடம் பேசிவிட்டு பதிலைத் தெரிவிப்பார் என்று சுமந்திரன் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, புதிய அரசமைப்பு, தீர்வு குறித்து நாமல் தெரிவித்த கருத்துக்கள் குறித்து கட்சியின் தலைமைப்பீடத்துடனும் நிறைவேற்றுச் சபையுடனும் கலந்துரையாடிய பின்னரே ஒரு இறுதி முடிவுக்கு வரமுடியும் என்று நாமலுடன் வந்திருந்த கட்சியின் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பனர் சாகர காரியவாசம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு நேரில் வந்து தமிழ் அரசுக் கட்சியுடன் தான் பேசத் தயாராக இருக்கிறார் என்பதையும் நாமல் இந்தச் சந்திப்பில் வெளிப்படுத்தினார்.

## சிவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காப்பு படை அதிகாரிகள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் சந்திரரத்ன பல்லேகம உள்ளிட்ட குழுவினர் இடையே நடந்த கலந்துரையாடல் ஒன்று நேற்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சக்தி ஆளும் தரப்பில் சிவில் பாதுகாப்பு படையைப் பலப்படுத்தி, அவர்களின் தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, முற்போக்கான வேலைத்திட்டம் ஒன்றை நாம் முன்னெடுக்க நடவடிக்கை எடுப்போம் .

தாமாக முன்வந்து சேவையைவிட்டு வெளியேறுபவர்களுக்கு நியாயமான இழப்பீடும், உரிய மரியாதையும் வழங்கப் படவேண்டும். யாரும் தமது அதிகாரத்தால் அவர்களை நீக்கக்கூடாது.

யாருக்கும் பாதகம் ஏற்படா வகையில், நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் புதிய முறைமையொன்று பின்பற்றப்படும்.

இந்தத்துறையை பெறுமதிமிக்க வளமாக மாற்றுவதுடன், நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு இவர்களின் கூடிய பங்களிப்பை பெற்றுக் கொள்ளும் வகையிலான வேலைத் திட்டமொன்றை முன்னெடுப்பேன் என்றார் .

## ஜே.வி.பியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நண்பர்கள் சிலர் மக்களுக்கு பயனில்லை என்றால் அரசியலை விட்டுவிடுங்கள் என்று ஆலோசனையும் வழங்கியிருந்தார்கள். ஆனால் இடைநடுவில் எம்மால் கைகழுவிச் செல்ல முடியாது. நாம் மாற்றத்தை உருவாக்காது, மக்களுக்கு தலைமைத்துவம் வழங்காது விட்டால் யார்தான் அதனை வழங்குவது. ஆகவே நாம் எமது மக்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என்றார்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர்
Kalaikkathir

# மர்ஹூம் அஷ்ரப் முன்வைத்த சமூக சிந்தனைகள் போன்று நீங்கள் ஆதரிக்கும் ஜனாதிபதிக்கு முன்வைத்தவை என்ன?

## செயற்பாட்டாளர் சிரேஷ்ட சட்டத்தரணி ஹாதி இஸ்மாயில் கேள்வி



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கி செயற்பட்டு வருகின்றது. இந்நிலையில் மாற்றத்திற்கான முன்னணி செயற்பாட்டாளர் மருதமுனையை சேர்ந்த சிரேஷ்ட சட்டத்தரணி ஹாதி இஸ்மாயில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அல்ஹாஜ் றஊப் ஹக்கீமுக்கு எழுத்து மூலமான கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்த கடிதத்தில் பின்வரும் விடயங்கள் சுட்டிக்காட்டப் பட்டுள்ளன,

உங்களுக்கு இக்கடிதம் கரம் கிட்டும்போது நிறைவான உடல் ஆரோக்கியத்துடனும் தெளிவான சிந்தனையோடும் இருக்க வேண்டுமென அல்லாஹ்வை பிரார்த்தித்தவனாக,

சஜித் பிரேமதாஸவால் ஏற்பாடு செய்யப்பட்ட ஐக்கிய மக்கள் கூட்டணியின் மேடையில் நீங்கள் பேசுகின்ற பொழுது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப், முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவிற்கு ஆதரவளித்து வெற்றி பெற செய்தது போன்று அவரின் புதல்வர் சஜித் பிரேமதாஸவை வெற்றிபெறச் செய்வோம் என்று கூறியிருந்தீர்கள். இது நீங்கள் உங்களுடைய கடந்த கால தேர்தல்கள் பற்றி சற்றும் சிந்திக்காமல் வாயில் வந்ததை பேசி விட்டீர்கள் என உணர முடிகிறது.

மறைந்த தலைவர் பிரேமதாஸவுடன் பல சுற்றுப் பேச்சுகளின் பின்னர் சிறுபான்மை சமூகங்களுக்கான நாடாளுமன்ற,மாகாண சபை பிரவேச வெட்டுப்புள்ளியை 4 சதவீதமாக குறைத்து பிரதிநிதித்துவத்தை அதிகரித்து சாதனை படைத்தார்.

அது மாத்திரமின்றி வெளிநாட்டு தூதுவர் பதவி,திணைக்கள அதிகாரிகள் நியமனம், முஸ்லிம் சமூகம் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் என்பவற்றை முன்வைத்து வாக்குறுதி கொடுத்த பின்னரே அவருக்கு தனது ஆதரவை வழங்கி வெற்றி பெறச் செய்தார் என்பதை தாங்கள் மறந்து விட்டீர்கள் போலும் தெரிகிறது.

இதே பேச்சு வார்த்தைகளை உலகின் முதற் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவிடமும் பேசி நிபந்தனைகளை நிறைவேற்ற மறுத்ததால்தான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிடம் எங்களுக்கு எந்த உறவும் இல்லையென்று அறிக்கை விட்டிருந்தார். என்பதையும் நீங்கள் அறியாமல் இல்லை. ஆனால் நீங்களோ சமூகம் சார்ந்த எந்த நிபந்தனைகளும் இன்றி தனது அமைப்பாளர் பதவியை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக கட்சியை ஐக்கிய மக்கள் கூட்டணியிடம் சரணாகதி அரசியல் புரிகின்றீர்கள் என்பதை ஞாபகமூட்ட விரும்புகிறேன்

சஜித் பிரேமதாசவின் மேடையில் முயல் துள்ளிப் பாய்வது போல் பாய்ந்து பேசி ஆமை போல் ஊர்ந்து வரும் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி வாய்ப்பினை உறுதிப்படுத்துவதற்கான ஒரு பேச்சாகவே இதனை நான் கருதுகிறேன். 20 வருடமாக நீங்கள் ஆதரித்த ஜனாதிபதி வேட்பாளர்கள் தோல்வி அடைந்தார்கள் என்பதையும் ஞாபகமூட்டுவதுடன் 2015ம் ஆண்டு தபால்மூல வாக்களிப்பு இடம்பெற்று முடிந்ததன் பின்னர் நீங்கள் மைத்திரிபால சிறிசேனாவுக்கு ஆதரவளித்திருந்தீர்கள் என்பதையும் ஞாபகம் மூட்டுகின்றேன்.

நீங்கள் ஆதரவளித்த ஜனாதிபதி வேட்பாளர்கள் தோல்வியடைந்தாலும் நீங்கள் தனிப்பட்ட முறையில் வெற்றி பெற்றீர்கள். அதேநேரம் அதாவுல்லாஹ் ஆதரவளித்த ஜனாதிபதி வேட்பாளர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள் ஆனால் அவர் தோல்விகளை தழுவியுள்ளார் என்பதையும் உங்களுக்கு ஞாபகம் மூட்டுகிறேன்.அதேநேரம் மக்கள் காங்கிரஸ் தீர்மானம் எடுப்பதற்கான காலத்தை நீடித்திருப்பது வரவேற்கத்தக்கதாகும் எனக் கருதுகிறேன்.

இலங்கையின் ஜனாதிபதி தேர்வில் சர்வதேச அரசியலும் செல்வாக்கு செலுத்துகிறது என்பதையும் நீங்கள் அறிவீர்கள் என்பதுடன் சர்வதேச சமூகம் தேர்தலில் வெற்றி பெறுவது யார் என்பதை தீர்மானிக்கும் ஒரு நிலைமை இருக்கிறது என்பதையும் தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். (05)

# இறந்து கரையொதுங்கிய சிவப்பு நிற நண்டுகள்

## திருகோணமலையில் சம்பவம்





திருகோணமலை நகரில் உள்ள கடற்கரையில் நேற்று (சனிக்கிழமை) அதிகாலை முதல் லட்சக்கணக்கான சிறு சிகப்பு நிறத்திலான நண்டுகள் இறந்த நிலையில் கரை ஒதுங்கி உள்ளன.

சனி, ஞாயிறு நாள்களில் இந்துப் பிரதேசத்துக்கு கூடுதலான சுற்றுலா பயணிகள் வருகின்ற நிலையில் இவ்வாறான நிகழ்வு ஒன்று இடம் பெற்று உள்ளது. இது தொடர்பான நடவடிக்கையில் திருகோணமலை நகர செயலாளர் ஈடுபடுவதாக உறுதியளித்தார்.

சுமார் ஐந்து தொடக்கம் ஆறு கிலோமீற்றர் நீளமுள்ள இந்த கடற் கரையில் மூன்று தொடக்கம் 4 கிலோ மீற்றர் தூரம் வரை இவ்வாறான சிகப்பு நிற நண்டுகள் இறந்த நிலையில் கரை ஒதுங்கி உள்ளன என்பது குறிப் பிடத்தக்கது. (05)

# ஆஸ்திரேலியாவில் தமிழ் ஏதிலிகள் 24 மணிநேர தொடர் போராட்டம்








ஆஸ்திரேலியாவில் நிரந்தர வதிவிட உரிமை வழங்கக் கோரி பதின்னான்கு வருடங்களாக காத்திருக்கும் ஏதிலிகள் ஒன்றிணைந்து கடந்த 6 ஆம் திகதி தொடக்கம் ஆஸ்திரேலிய உள்துறை அமைச்சர் டோனி பர்க்கின் அலுவலகத்திற்கு முன்பாக 24 மணிநேர தொடர் போராட்டம் ஒன்றை நடத்தி வருகின்றார்கள்.

2009 ஆம் ஆண்டுகளின் பின்னர் தமது சொந்த மண்ணில் வாழ நிர்க்கதியற்று ஆஸ்திரேலியாவிற்குப் புலம்பெயர்ந்துள்ள தமிழ் ஏதிலிகள் கடந்த 12-14 வருடங்களாக நிரந்தர வதிவிட உரிமைவழங்கப்படாதுதொடர்ந்தும் அந்நாட்டு அரசாங்கத்தால் தாம் வஞ்சிக்கப்படுவதாககூறுகிறார்கள்.

தமது சொந்த நாட்டிற்கு மீளத் திரும்ப முடியாத உயிர்ப் பாதுகாப்பின்மை ஒருபுறம் புகலிடக்கோரிக்கைகள் மறுக்கப்பட்டு நிரந்தர வதிவிட உரிமையற்ற அங்கலாய்ப்பும்தமதுகுடும்பஉறுப்பினர்களோடு சேர்ந்து வாழ முடியாத கையறு நிலையுமாக தொடர்ச்சியானஉளச்சிதைவுகளால்இவர்கள் துவண்டு போயிருக்கின்றார்கள்.

போராட்டமே வாழ்வாகிப் போனதாம்வேறுவழிகளன்றியே இந்த அமைதி வழியிலான போராட்டத்தை முன்னெடுத்து வருவதாகவும், தமக்கு நிரந்தர விசா வழங்கப்படும் வரையிலும் தாம் தமது போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை எனவும் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் கூறுகின்றார்கள்.

எனவே இந்தப் போராட்டம் வெற்றியளித்து தமக்குரிய வாழ்வுரிமை கிடைப்பதற்காக ஆஸ்திரேலியாசிட்னியில்உள்ள அனைவரினதும் ஒத்துழைப்பையும் வேண்டுவதோடு தமது போராட்டக்களத்திற்கு அனைவரையும்அணிதிரண்டு வந்து உறுதுணையாக நிற்குமாறும் வேண்டுகோள் ஒன்றையும் முன்வைக்கின்றார்கள்.

ஆஸ்திரேலியாவில் தற்போது நிலவிவரும் குளிர் காலத்தையும்பொருட்படுத்தாது தொடர்ச்சியாக 24 மணி நேரமும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சா'ாமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ரணிலுக்கு வந்துள்ள சவால்

அரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரான நாமல் ராஜபக்ச சிறுவனாக இருந்தாலும் தனது அரசியல் நகர்வுகளில் முதிர்ச்சியை வெளிப்படுத்தி அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை இக்கட்டுக்குள்ளும் சிக்கலுக்குள்ளும் மாட்டிவிட்டுள்ளார். தமிழர் தம் பிரச்சினைக்கு மைத்திரி – ரணில் கூட்டாட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட புதிய அரசமைப்பு வரைபிலிருந்து முன்செல்லலாம் என்ற யோசனையை முன்வைத்தன் மூலம் நாமல் அரசியில் களத்தில் ரணிலுக்கு ஒரு 'செக்மேட்' வைத்துள்ளார்.

ரணில் தலைமை அமைச்சராகப் பதவி வகித்த 2015 முதல் 2019 வரையான காலப் பகுதியில்தான் புதிய அரசமைப்பு முயற்சி முன்னெடுக்கப்பட்டது. ஒட்டுமொத்த நாடாளுமன்றத்தையும் அரசமைப்புச் சபையாக மாற்றி இந்தப் புதிய அரசமைப்பு வரைபு உருவாக்கப்பட்டது. வழிகாட்டல் குழு, உப குழுக்கள் என்று பெருமெடுப்பில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. நாடாளுமன்றில்அங்கத்துவம்வகித்தகட்சிகள்எல்லாவற்றினதும் ஆதரவு மற்றும் பங்கேற்போடு புதிய அரசமைப்புக்கான வரைவு ஒன்று உருவாக்கப்பட்டது. அது நாடாளுமன்றத்திலும் –சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் நிறைவேற்றப்படவில்லை.

அப்போது அரசுத் தலைவராக இருந்தவரான மைத்திரிபால சிறிசேனவிற்கும் தலைமை அமைச்சராக இருந்தவரான ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் ஏற்பட்ட அதிகார முரண்பாடுகள் காரணமாகவும் தேர்தல் சீர்திருத்தம் தொடர்பில் புதியஅரசமைப்புவரைவில்முன்வைக்கப்பட்டயோசனைகளாலும் புதிய அரசமைப்பு வரைவு முயற்சி முற்றிலுமாக முடங்கிப்போனது.

இந்தப் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியில் தமிழ் அரசுக் கட்சி தலைமையிலான அப்போதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஆதரவு வழங்கியது. அதன் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் புதிய அரசமைப்பு வரைவை உருவாக்கும் குழுவில் முதன்மை உறுப்பினராக இருந்தார். இருந்தாலும் கூட்டமைப்பன் பங்காளிக் கட்சிகளும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் போன்றவர்களும் அந்த வரைவை எதிர்த்தார்கள்.

இலங்கையின் ஒற்றையாட்சித் தன்மையை நீக்கி கூ;டாட்சியை (சமஷ்டி) ஏற்படுத்த இந்தப் புதிய அரசமைப்பு வரைவு தவறிவிட்டது என்று அவர்கள் விமர்சித்தார்கள். தமிழர்களின் ஒரு பகுதியினர் அதனை நிராகரித்தார்கள் என்றாலும், இந்த புதிய அரசமைப்பு வரைவு ஊடான தீர்வு முயற்சி தடைப்பட்டுப் போனமைக்கு அது காரணமல்ல. மைத்திரி – ரணில் ஆளும் தரப்புக்குள் ஏற்பட்ட முரண்பாடு, குழப்பம் காரணமாகவே அந்த முயற்சி கைவிடப்பட்டது.

இதில் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய விடயம் என்னவென்றால், இந்தத் திட்டத்தின் தளகர்த்தாவாகவும் முதன்மைச் செயற்பாட்டாளராகவும் இருந்தவர் தற்போதைய அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. ஆனால் பிற்காலத்தில் அவர் இந்த அரசமைப்வு வரைவு குறித்துப் பேசுவதையே நிறுத்திவிட்டார். தற்போதைய அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது என்கிற வரையறைக்குள் தன்னைச் சுருக்கிக்கொண்டார் அல்லது அந்த முயற்சியில் இருந்து பின்வாங்கி ஒழிவிட்டார். அண்மைக் காலங்களில் வேறு ஒரு புதிய அரசமைப்பை உருவாக்கலாம் என்று பேசி வருகின்றார். கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வான் ஏறி வைகுந்தம் போன மாதிரித்தான் என்கிற கதையாக, இறுதிய செய்யப்பட்ட ஒரு அரசமைப்பு வரைபையே நிறுவ முடியாத ரணில் விக்கிரமசிங்க மற்றொரு புதிய அரசமைப்புத் தொடர்பில் பேசுவது வேடிக்கை.

இப்படித் தான் முன்னின்று உருவாக்கிய தனது அரசமைப்பு வரைபையே தனக்கெதிரான ஆயுதமாக நாமல் ராஜபக்ச கையில் எடுப்பார் என்று ரணில் கனவிலும் நினைத்திருக்கமாட்டார். அடுத்த அரசுத் தலைவர் ஆகுவதற்கு தமிழ் மக்களின் ஆதரவை எதிர்பார்த்து நிற்கும் ரணில் விக்கிரமசிங்கவிற்கு நாமலின் யோசனை பெரும் தலையிடி. நல்லாட்சிக் கால புதிய அரசமைப்பு வரைபை தீர்வுக்கான முன்மொழிவாகக் கொள்ளமுடியும் என்று நாமல் தெரிவித்திருக்கும் நிலையில் 13இன் நடைமுறையாக்கம் பற்றி ரணில் பேசிக்கொண்டிருப்பது தமிழ் மக்களின் காதுகளில் விழப்போவதில்லை. இனி என்ன செய்யப் போகிறார் ரணில்?

# பக்கவாதம் வந்த பிறகு என்ன செய்வது?



**கு.கணேசன்**

வாசகர் ஒருவர் சென்ற வாரம் அலைபேசினார். ஊர், பெயர் வேண்டாம். அவருக்கு வயது 66. சென்ற மாதம் அவருக்குப் பக்கவாதம் வந்திருக்கிறது. நரம்புநல மருத்துவரிடம் சிகிச்சை பெற்று ஓரளவு குணமடைந்து வருகிறார். அவருக்கு வலது கை, கால்கள் செயலிழந்துவிட்டன. பேச்சு குழறுகிறது. தசைப் பயிற்சிகளை மேற்கொள்ளச் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் உணவு விழுங்குவதில் சிரமம் இருக்கிறது. அவருக்கு குருதிக் கொதிப்பும் நீரிழிவு நோயும் உண்டு. மாத்திரைகள் சாப்பிட்டு வருகிறார். அவருக்குப் புகைபிடிக்கும் பழக்கம் உண்டு. இப்போது மலச்சிக்கலும் உள்ளது; மன உளைச்சலும்



உள்ளது. இனிமேல், அவர் எந்த மாதிரியான தற்காப்பு முறைகளை மேற்கொள்ள வேண்டும் என்று என்னிடம் ஆலோசனை கேட்டார்.

இந்த வாசகரைப் போன்று இன்னும் பலர் பக்கவாதம் ஏற்பட்ட பின்னர் என்ன செய்வது என்ற கேள்வியுடன் இருப்பார்கள். ஆகவே, எல்லோருக்கும் பயன்படுகிற மாதிரி, அவருக்கு நான் சொன்ன ஆலோசனைகளையே இந்த வாரத்துக்குரிய விஷயமாக எடுத்துக்கொண்டேன்.

**இதோ நான் சொன்ன பதில்:**

முதுமையில் மக்களை அதிகமாக ஊனமாக்கும் நோய், பக்கவாதம். இதன் பாதிப்பால் செயலிழந்த கைகால்களை மறுபடியும் பழைய நிலைக்குக் கொண்டுவருவதற்குமனஉறுதிதேவை;தசைப்பயிற்சி உள்ளிட்ட தொடர் சிகிச்சைகள் தேவை. நோயாளிகள் நம்பிக்கையுடன் இந்தப் பயிற்சிகளைத் தொடர்ந்து செய்து வந்தால், நல்ல முன்னேற்றம் கிடைக்கும். ஆனால், யானை வாங்கிவிட்டு அங்குசம் வாங்க யோசிக்கிறவர்கள்தான் இங்கே அதிகம்.

மருத்துவமனையில் இருக்கிறவரை நோயாளியைக் கவனிக்கின்றனர். வீட்டுக்கு வந்த பிறகு இந்தப் பயிற்சிகளுக்கு ஏற்பாடு செய்ய யோசிக்கின்றனர். இதில்தான் தவறுசெய்கின்றனர். பெரும்பாலானோர் அவற்றுக்கு வழிசெய்யாமலும், அருகிலிருந்து கவனிக்க வசதி செய்யாமலும் பாதிக்கப்பட்டவரைத் தனிமையில்விட்டுவிடுகின்றனர். அந்தத்தனிமையே அவர்களுக்குப் பெரும் தண்டனையாகிவிடுகிறது.

**தசைப் பயிற்சிகள் முக்கியம்!**

மருத்துவமனையில் சிகிச்சை முடிந்த பிறகு, வீட்டில் தசைப் பயிற்சிகள் மேற்கொள்ள ஓர் இயன்முறை மருத்துவரை ஏற்பாடு செய்யவேண்டும். தினமும் ஒரு மணி நேரம் இதற்கு ஒதுக்கவேண்டும். பக்கவாதம் வந்தவர்களுக்குப் படுக்கைப் புண்கள் வரவாய்ப்பிருக்கிறது. இதை முதலில் தவிர்க்க வேண்டும். அதற்குப் படுக்கை நிலையில் கவனம் செலுத்தவேண்டும். மெலிதான தலையணையைத் தலைக்கு அடியில் வைத்துக்கொள்ளலாம். முழங்கை வரையிலும் கைக்குத் தலையணை வைத்துக்கொள்ளலாம். தேவைப்பட்டால் காலுக்கும் தலையணை வைத்துக்கொள்ளலாம். தோள்களும் தலையணையில் இருக்கவேண்டும்.

**படுக்கைப் புண் வராமல் தடுக்க!**

ஒரே நிலையில் 2 மணி நேரத்துக்குமேல் படுக்கக்கூடாது. படுக்கைவிரிப்பைச்சுத்தமாகவும் சுருக்கங்கள் இல்லாமலும் வைத்துக்கொள்ள வேண்டும். மூன்று நாட்களுக்கு ஒருமுறை படுக்கை விரிப்புகளை மாற்றிவிடவேண்டும். 'தண்ணீர்ப் படுக்கை' (Water bed) நல்லது. சருமம் சிவப்பாகிறதா, சருமத்தில் புண் இருக்கிறதா எனத் தினமும் சோதித்துக்கொள்ளவேண்டும். எழுந்திருக்கும்போதும், உட்காரும்போதும், அதனை மற்றவர் உதவியுடன் மேற்கொள்வதே நல்லது. அல்லது படுக்கைக்கு அருகில் சுவரில் கைப்பிடிகளைப் பொருத்திக்கொண்டு, அவற்றைப் பிடித்து எழுந்து உட்காரலாம்.

தோள், முழங்கை, மணிக்கட்டு, விரல்கள், தொடை, முழங்கால், பாதங்கள் என வரிசையாக தசைப் பயிற்சிகளை மேற்கொள்ளவேண்டும். முதலில் சில வாரங்களுக்கு இயன்முறை மருத்துவர் வீட்டிற்கே வந்து பயிற்சிகளை மேற்கொள்ள உதவலாம். அதன் பிறகு, நீங்களே அவற்றை மேற்கொள்ள முடியும். அல்லது வீட்டில் உள்ளவர்கள் இதற்கு உதவலாம்.

**'வாக்கர்' உதவும்!**

பக்கவாதம் வந்தவர்களுக்கு உடல் சமன்பாட்டில் பிரச்சினை ஏற்படுவது வழக்கம். உதாரணமாக, படுக்கையைவிட்டு எழுந்திருக்கும்போது, உடல் ஒரு திசையில் இழுப்பதுபோன்று இருக்கும். இந்த நிலைமையைத் தவிர்க்கவும் தனிப் பயிற்சிகள் உண்டு. இயன்முறை மருத்துவர் உதவியுடன் இவற்றையும் மேற்கொள்ளவேண்டும். தொடர்ந்து இந்தப் பயிற்சிகளை மேற்கொண்டு வந்தால், சில வாரங்களில் 'வாக்கர்' கொண்டு நடக்கப் பழகிவிடலாம்.

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# பக்கவாதம் வந்த பிறகு என்ன செய்வது?

**பேச்சுப் பயிற்சி தேவை**

உணவை விழுங்குவதிலும் பேசுவதிலும் சிரமம் இருக்கிறது என்றால், இவற்றுக்கும் தனிப் பயிற்சிகளை மேற்கொள்ளவேண்டும். இயன்முறை மருத்துவர் தொண்டை தசைகள் வலிமை பெற பயிற்சிகளைக் கற்றுக்கொடுப்பார். சாப்பிடும்போது உணவு புரையேறிவிடாமல் இருக்கவும் கவனம் செலுத்தவேண்டும். அதற்கேற்ப உணவுகளைத் தேர்வு செய்துகொள்ளவேண்டும். மெல்வதற்கு எளிதான உணவுகளை சிறிதளவில் அடிக்கடி உண்ணலாம். பேச்சு - மொழி பயிற்றுநர் சுலபமாக உணவை விழுங்க வழி சொல்லுவார். பேச்சு தொடர்பான பிரச்சினைகளுக்கும் பயிற்சிகள் தருவார்.

பயனாளிக்குச் சிறுநீர் போக ரப்பர் குழாய் பொருத்தியிருந்தால், இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை அதை மாற்றிவிடவேண்டும். இல்லையென்றால், தொற்று ஏற்பட்டு, குளிர் காய்ச்சல் வர வாய்ப்பிருக்கிறது. ரப்பர் குழாய் இல்லாமல் இருந்தால், சிறுநீர்க்கசிவு ஏற்பட வழி உண்டு. இதற்குப் பெரியவர்களுக்கான டயாபர் மற்றும் பேன்டி பேடுகளை அணிந்துகொள்ளலாம்.

**எளிய உணவுகள் முக்கியம்!**

விழுங்குவதில் சிரமம் உள்ளவர்கள் உணவிலும் கவனம் செலுத்தவேண்டும். முழுத்தானியக் கஞ்சி, பருப்புக் குழம்பு, அரைக்கப்பட்ட காய்கறி, கறி, பழம், நசுக்கப்பட்ட கிழங்கு, அரைவேக்காடு முட்டை, பிரக்கோலி, முட்டைக்கோஸ், சோயாபீன்ஸ், அவரை, பச்சை தேநீர், இலையுள்ள காய்கறிகள், ஓட்ஸ், தயிர், கிரில் செய்த மீன், பாலாடைக்கட்டி ஆகியவை சிறந்த உணவுகள். இவற்றை அடிக்கடி சேர்த்துக்கொள்ளலாம்.

**மலச்சிக்கல் இருந்தால்?**

மலச்சிக்கல் இருந்தால், நிறையத் தண்ணீர் அருந்தவேண்டும். நார்ச்சத்துள்ள முழுத் தானியங்கள், சிறுதானியங்கள், காய், பழம் தினமும் சாப்பிடுங்கள். மலச்சிக்கலை இலகுவாக்கும் மாத்திரைகளையும் பயன்படுத்தலாம். மலம் கழிப்பதற்கு பெட்பேன் அல்லது கழிப்பறை நாற்காலி பயன்படுத்துங்கள். சிறுநீர் மற்றும் மலம் கழிப்பதற்கு கழிப்பறைக்குச் செல்வதாக இருந்தால், சுவரில் கைப்பிடிகளைப் பொருத்திக்கொள்வது நல்லது.

**மனச்சோர்வை விரட்டுங்கள்**

மூலிகை மருந்துகள் மற்றும் மூலிகை தேநீர் வேண்டாம். இவை நீங்கள் சாப்பிட்டுவரும் சில மருந்துகளைச் செயலிழக்கச் செய்ய வாய்ப்பிருக்கிறது. பக்கவாதம் ஏற்பட்டவர்களுக்கு முக்கியப் பிரச்சினை மனச்சோர்வாகத்தான் இருக்கிறது. குளிப்பது, உடை உடுத்துவது, உணவு உண்பது போன்ற அன்றாடத் தேவைகளுக்குக்கூட மற்றவர்களைச் சார்ந்திருக்க வேண்டியதிருக்கிறதே என்று நினைத்து வருத்தம் ஏற்படுவது இயல்புதான்.

இதையும் கடந்துவிடலாம். 'நான் மறுபடியும் நடக்க ஆரம்பித்துவிடுவேன்' என்று மன உறுதிகொள்ள வேண்டும். தினமும் தியானம் செய்வது மன உளைச்சலைக் குறைக்க உதவும். நண்பர்களுடன் அடிக்கடி பேசுங்கள். இசை கேளுங்கள். புத்தகம் படியுங்கள். முடிந்த பொழுதுபோக்குக் கலைகளில் ஈடுபட வேண்டியதும் முக்கியம்.

மீண்டும் பக்கவாதம் ஏற்படாமல் இருக்க வழிகள்:

குருதி அழுத்தம், நீரிழிவு மற்றும் கொலஸ்டிரால் அளவுகளைக் கட்டுப்படுத்துங்கள்.

மருத்துவர் கூறும் மருந்துகளைத் தொடர்ந்து சாப்பிடுங்கள். சுயமாக, அவற்றை நிறுத்துவதோ, குறைப்பதோகூடாது.

புகைபிடிக்க வேண்டாம். மது அருந்த வேண்டாம்.

உப்பு, இனிப்பு, கொழுப்பு குறைந்த உணவுகளையே சாப்பிடுங்கள்.

உடல் எடையைச் சீராக வைத்துக்கொள்ளுங்கள்.


**நம்பிக்கை தரும் நவீன சிகிச்சை**

பக்கவாதம் ஏற்பட்டவர்களுக்கு நம்பிக்கை தரும் நவீன சிகிச்சையாக தற்போது வந்திருக்கிறது, 'ஸ்டென்ட் மீள் சிகிச்சை' (Stent retriever therapy). 'ஸ்டென்ட்' என்பது பால்பாய்ண்ட் பேனாவில் இருக்கும் ஸ்பிரிங் மாதிரியான சிறிய வலைச்சுருள். மூளையில் குருதிக்குழாய் அடைப்பு மிகவும் கடுமையாக இருந்தால், அதை மருந்துகளால் மட்டும் கரைக்க முடியாது. அப்போது 'ஸ்டென்ட் சிகிச்சை' தோள் கொடுக்கிறது.

நோயாளியின் தொடையில் இருக்கும் குருதிக்குழாய் வழியாக ஒரு வளைகுழாய் இணைந்த 'ஸ்டென்ட்'டை மூளைக்கு அனுப்பி, அடைப்புள்ள இடத்தை அடைந்ததும் ஸ்டென்டை விரியச்செய்து, குருதிக் கட்டியைக் கவ்வி எடுத்து, ஸ்டென்டை உருவி விடுகிறார்கள். இதனால் அங்கே குருதி ஓட்டம் மீள்கிறது. மூளையின் செல்கள் புத்துயிர் பெற, பாதிக்கப்பட்ட கை, கால்கள் முன்புபோல் இயங்குகின்றன.

பக்கவாதம் வந்த 6 மணி நேரத்துக்குள் இதைச் செய்துவிடவேண்டும். அப்போதுதான் பயன் கிடைக்கும். ஆனாலும், மூளையில் குருதிக் கசிவால் பக்கவாதம் வந்தவர்களுக்கு இந்தச் சிகிச்சை பயன் தராது என்பதையும் கவனத்தில்கொள்ளவேண்டும்.








கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swohpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# மல்வானை, உளகிட்டிவள அல்மஹ்மூத் ம.வி. மாணவர்களுக்கான ஜேர்ஸி அறிமுக நிகழ்வு





(எஸ்.அஷ்ரப்கான்)

களனி வலய பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்ட சுற்றுப் போட்டி 'முபாறக்கியன்ஸ் சம்பியன்ட்ரொபி' இல் விளையாடும் மல்வானை, உளகிட்டிவள அல்-மஹ்மூத் மகா வித்தியாலய மாணவர்களுக்கான ஜேர்ஸி அறிமுக நிகழ்வு சனிக்கிழமை பாடசாலையில் அதிபர் எம்.எம்.றிம்ஸான் தலைமையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில், பாடசாலை விளையாட்டுப்பிரிவு பொறுப்பாசிரியர், பாடசாலை அபிவிருத்தி சங்க அங்கத்தவர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் இச்சீருடையை பாடசாலை மாணவர்களுக்காகத் தயார்செய்து கொடுத்த மல்வானை மல்டி பெப்ரிக் உரிமையாளர் அல் - ஹாஜ் அனீஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

எமது பாடசாலை கால்பந்தாட்ட அணியினருக்கான ஜேர்ஸி குறைபாடு நீண்டகாலமாக இருந்த நிலையில் அதனை நிவர்த்தி செய்து தந்த மல்வானை மல்டி பெப்ரிக் உரிமையாளர் அல் - ஹாஜ் அனீஸ் அவர்களுக்கு பாடசாலை சமூகம் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறது. (05)

# செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன வெள்ளி விழா நேற்று திருகோணமலையில்









(ஹஸ்பர் ஏ.எச்)

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் வெள்ளி விழா நேற்று (சனிக்கிழமை) திருகோணமலையில் உள்ள செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன அரங்கில் நடைபெற்றது.

வெள்ளி விழாவை முன்னிட்டு கிரிக்கெட் உதைபந்தாட்டம் முதலிய பல விளையாட்டு போட்டிகள் நடைபெற்று அதற்கான கோப்பைகள் நிகழ்வின் தலைமை விருந்தினரான திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசனால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வின் தலைமை விருந்தினர் உரையின் போது நாடாளுமன்ற உறுப்பினர் ச. குகதாசன், வெளிநாடுகளில் செவிப்புலன் அற்றோர்கள் எப்படி எல்லாத் துறைகளிலும் தங்களை நிரூபித்து முன்னிலை வகிக்கின்றார்களோ அதே போன்று நமது நாட்டிலும் இவர்களை சகல துறைகளிலும் சாதிக்க உறுதுணையாக நிற்பேன் என்று கூறினார்.

இந்நிகழ்வினை சிறந்த முறையில் செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் காப்பாளர் பாலசுப்ரமணியம், செயளாலர் அன்ரனி வியணகே, கனடாவில் உள்ள செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவர் பாலநாயகம் உள்ளிட்டோர்களால் சிறப்பான முறையில் ஒருங்கிணைப்புசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

# வவுனியா வடக்கு கல்வி வலய சாரண ஆசிரியர்களுக்கு பயிற்சி

வவுனியாவடக்குவலயசாரண ஆசிரியர்களுக்கு கலைக்கூறு -1 பயிற்சியானது இரு தினங்களாக இடம்பெற்றது.







வவுனியா மாவட்ட சாரண சங்கத்தின் ஏற்பாட்டில் ஓமந்தை மத்திய கல்லூரியில் இந்தப் பயிற்சி புதன், வியாழன் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட சாரண ஆணையாளர் யோ.கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இப்பயிற்சியில் பயிற்சித் தலைவராக ப.அஜித்குமாரும், உதவி பயிற்சி தலைவர்களாக ரா.வரதராஜா, யோ.கேதீசனும் பயிற்சிநெறியை வழங்கியிருந்தனர்.

இந்நிகழ்வில், வவுனியாவடக்கு வலயக்கல்விப்பணிப்பாளர்மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர், உதவி மாவட்ட ஆணையாளர் ஆகியோரும் அதிதிகளாக கலந்து கொண்டனர்.(05 - 100)

# வவுனியாவில் இளைஞன் கடத்தல் சம்பவம் தொடர்பில் 3 மோட்டார் சைக்கிள்கள் மீட்பு

## ஏழு இளைஞர்கள் கைது

வவுனியாவில் இளைஞன் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் சனிக்கிழமை மூன்று மோட்டர் சைக்கிள்கள் மீட்கபட்டுள்ளதுடன், ஏழு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம்தொடர்பில்மேலும்தெரியவருவதாவது -

கடந்த வியாழக்கிழமை அதிகாலை வவுனியா பூந்தோட்டம் பகுதியில் வசிக்கும் இளைஞர் ஒருவரை காணவில்லை என வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேற்படி முறைப்பாடு தொடர்பில் வவுனியா பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். இதன்போது சந்தேகத்தின் பேரில் சில இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் பல்வேறு தகவல்கள் தெரியவந்துள்ளது.

வவுனியா, பூந்தோட்டம் பகுதிகளைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கடந்த புதன்கிழமை மாலை பூந்தோட்டம் பகுதியில் உள்ள தனது வீட்டில் தனது பிறந்தநாள் நிகழ்வை வெகு விமர்சையாக கொண்டாடியுள்ளார்.

அந்த நிகழ்வுக்காக அங்கு உறவினர்கள், நண்பர்கள் என பலர் வந்திருந்தனர். அங்கு வந்த அவரது சில நெருங்கிய நண்பர்கள் மது போதையில் இருந்துள்ளனர்.

இதன்போது, பிறந்தநாள் நிகழ்வை சிறப்பிப்பதற்காக நண்பர்கள், இளைஞர் குழுக்களாக பாட்டுப்பாடி நடனம் ஆடினார்கள்.

இந்த நேரத்தில் மதுபோதையில் இருந்த நெருங்கிய நண்பர்கள் பிறந்தநாள் நிகழ்வுக்காக வந்த பெண் நண்பிகளுடன் சேர்ந்து நடனமாட முற்பட்ட வேலை பிறந்தநாள் கொண்டாடிய நண்பன் அதனை அனுமதிக்காது தடுத்துள்ளார்.

இதனால் நெருங்கிய நண்பர்கள் மற்றும் இளைஞர் குழுக்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

இதனை அங்கு இருந்த உறவினர்கள் சமரசம் செய்து வைத்துள்ளனர்.

அதன் பின்னர் வியாழக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் குழு ஒன்று பிறந்தநாள் கொண்டாடிய இளைஞனை கடத்தி சென்று குட்செட் வீதியில் உள்ள கருமாரி அம்மன் கோயிலுக்கு அருகில் உள்ள பாழடைந்த வீட்டில் இளைஞனை அடைத்து வைத்து கடுமையாக கொலை வெறி தாக்குதல் நடத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


குறித்த பாழடைந்த வீட்டில் இளைஞனை அடைத்து வைத்து விட்டு கடத்தியவர்கள் தப்பி சென்ற நிலையில், கடத்தப்பட்ட இளைஞனை மீட்டு அவரை வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் பொலிஸார் சேர்த்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் 20 வயது தொடக்கம் 22 வயது வரையுள்ள 7 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் பட்டைகாடு பகுதியைச் சேர்ந்த 3 பேரும், வேப்பங்குளம் பகுதியைச் சேர்ந்த 2 பேரும் கோயில் புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவரும் தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த ஒருவருவரும் உள்ளடங்கியுள்ளனர்.

அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் போது கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட மூன்று மோட்டர் சைக்கிள் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களையும் கைது செய்யப்பட்ட இளைஞர்களையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (05)



## ஆணொருவர் சடலமாக அத்தனகலு ஓயாவில் மீட்பு

### சந்தேகநபர்கள் கைது

கம்பஹா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அத்தனகலு ஓயாவில் கடந்த 5 ஆம் திகதி ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என கம்பஹா தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பஹா பாலும்மஹர பகுதியைச் சேர்ந்த சுரங்க த சில்வா என்ற 40 வயதுடைய திருமணமான நபரொருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாலும்மஹர மற்றும் கம்பஹா ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் 39 முதல் 46 வயதுக்குட்பட்ட மூவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், சடலமாக மீட்கப்பட்டவரின் மோட்டார் சைக்கிள் அத்தனகலு ஓயாவில் வீசப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, இந்த மோட்டார் சைக்கிளை தேடும் பணியில் கடற்படையின் சுழியோடிகள் வெள்ளிக்கிழமை ஈடுபட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பஹா தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## தொடல்பாடல் தொழிநுட்ப அதிகாரியாக பாத்திமா



*(எம்.எம்.ஜெஸ்மின்)*

*ஜமால்முகம்மது முகம்மது சறூக் (வைத்தியசாலை ஊழியர்) - செய்யது இப்றாகீம் நகீபா (ஆசிரியை- அல்-ஹிலால் கனிஷ்ட) தம்பதியினரின் மகளான பாத்திமா அஸ்ஹா 2024 யில் நடைபெற்ற இலங்கை தகவல் மற்றும் தொடல்பாடல் தொழிநுட்ப சேவையில் வகுப்பு 2 தரம் டட க்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்தப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி சித்தி பெற்று கடந்த மாதம் நடைபெற்ற நேர்முகத் தேர்வி லும் வெற்றிபெற்று இலங்கை தகவல் மற்றும் தொடல்பாடல் தொழிநுட்ப சேவைக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார்.*

*பாத்திமா அஸ்ஹா நிலை நாட்டியுள்ள இச் சாதனை ஒரு மிகப் பெரும் அடைவு. இந்த அடைவானது மூதூர் மண்ணைப் பொறுத்த வரையில் மிகப் பெரும் வரலாற்றுச் சாதனையாகும். (05)*



# குடியிருப்பு காணிகளை அபகரிக்க வேண்டாம் கப்பல் துறை பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டம்





திருகோணமலை, மாவட்டம் பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கப்பல் துறை பகுதியில் உள்ள மக்கள் தங்கள் காணிகளை அபகரிக்க வேண்டாம் என கோரி நேற்று (சனிக்கிழமை) கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

மேற்படி கவனவீர்ப்பில் பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டதுடன் அல்அக்சா ஜும் ஆ பள்ளிவாயலுக்கு முன்னால் இருந்து அஷ்ரப் நகர் வயல் வீதி வரை பேரணியாக சென்றனர்.

'வேண்டாம் வேண்டாம் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் வேண்டாம், எங்களுடைய விவசாய காணிகள் எங்களுக்கு வேண்டும், போன்ற வாசகங்களை ஏந்தியவாறும் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

இலங்கைதுறைமுகஅதிகாரசபையினர்தங்கள்பகுதிக்குள் வந்து விவசாயம் செய்ய விடாது தடுத்து நிறுத்துவதுடன் எந்தவித கட்டடமோ குடியிருப்புக்களை அகற்றுமாறும் வற்புறுத்துவதாக தெரிவிக்கின்றனர் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

குறித்த கப்பல் துறை கிராமத்தில் சுமார் 1200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அன்றாட ஜீவனோபாயமாக மீன் பிடி , விவசாயத்தை கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

சுமார் 150 ஏக்கர் அளவில் விவசாய காணிகள் காணப்படுகின்றன இவ்வாறு 1977 இல் மீள் குடியேறிய மக்கள் தற்போது அவர்களை வெளியேறுமாறு துறை முக அதிகார சபையினர் கூறி வருகின்றனர்.

அப்போதைய கப்பல் துறை, துறை முகங்கள் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சராக செயற்பட்ட மறைந்த எம்.எச்.எம்.அஷ்ரப்பால் மக்கள் மீள் குடியேற்றப்பட்டார்கள் என்பதுடன் குறித்த அமைச்சரால் 1995 பங்குனி மாதம் 04 ஆம் திகதி குறித்த கிராமத்தில் உப தபால் கந்தோர், வாசிகசாலை, கிராம அதிகாரி, சனசமூக நிலைய கட்டடத் தொகுதியும் திறந்து வைக்கப்பட்டு தற்போது வரை இயங்கி வருவதுடன் மக்கள் சேவையும் இடம் பெற்று வருகிறது.

நாங்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வாழ்ந்து வருகிறோம். துறை முக அதிகார சபையினர் எங்களை வெளியேறுமாறு அடிக்கடி தொல்லை செய்கின்றனர் எங்களை நிம்மதியாக வாழ விடுங்கள் எனவும் கவனவீர்ப்பில் ஈடுபட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இப் பிரதேச மக்களின் காணிகளுக்கான உறுதிப் பத்திரங்களை வழங்கி வாழ வைக்குமாறும் இதன் போது கோரிக்கை விடுத்தனர்.


(05)

யாழ்ப்பாண வர்த்தகத் தொழிற்துறை மன்றம் ஒழுங்கமைத்து நடாத்தும்

CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM
CCIY
UNITY IS STRENGTH

JAFFNA INTERNATIONAL BOOK FESTIVEL
யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா
JIBF 2024

## யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா - 2024
## Jaffna International Book Festival - 2024



ஆகஸ்ட் – 9 ,10 மற்றும் 11 ம் திகதிகளில்
9th ,10th & 11th August - 2024

யாழ்ப்பாண கலாச்சார மத்திய நிலையம்
Jaffna Cultural Centre – Exhibition gallery space

CCIY . 63- NALLUR CROSS ROAD. NALLUR. JAFFNA | info@cciy.lk | 070 366 3603

ஊடக பங்காளர்கள் காலைக்கதிர்

# மன்னார் மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா குறித்து விசேட கலந்துரையாடல்




மன்னார் மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா திருப்பலியில் இம்முறை நாட்டின் பல பாகங்களில்இருந்தும்பலலட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர் பார்க்கப் பட்டுள்ள நிலையில் முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்த விசேட கலந்துரையாடல் வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் மடு திருத்தலத்தில் இடம்பெற்றது.

மன்னார் மருதமடு அன்னையின் ஆவணி மாத திருவிழா கடந்த 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 ஆம் திகதி விசேட திருவிழாவாக இடம்பெற உள்ளது.

இந்த நிலையில் மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழாவுக்கான ஆயத்த கலந்துரையாடல் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் பங்குபற்றுதலுடன் வெள்ளிக்கிழமை காலை மடு திருத்தல மண்டபத்தில் இடம்பெற்றது.

வருடா வருடம் மடு அன்னையின் ஆவணித் திருவிழாவில் கலந்துகொள்ள நாட்டின் பல பாகங்களில் இருந்தும் புலம்பெயர் நாடுகளில் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றமை வழமை.

இந்தநிலையில்வருகைதரும்பக்தர்களின்நலனை கருத்தில் கொண்டு முன்னெடுக்கப்பட வேண்டிய சகல விதமான ஏற்பாடுகள் குறித்து அழைக்கப்பட்ட திணைக்களங்களுடன் கலந்துரையாடப்பட்டது.

வருகை தரும் பக்தர்களின் நலனைக் கருத்தில் கொண்டு சுகாதாரம், போக்குவரத்து,மருத்துவ வசதிகள், நீர் விநியோகம், உணவு விநியோகம் உள்ளிட்டவை குறித்து ஆராயப்பட்டது.

மேலும் சட்டம் ஒழுங்கை பின்பற்றும் வகையில் முப்படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

எதிர்வரும் 06 ஆம் மருத மடு அன்னையின் ஆவணி மாத திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, 15 ஆம் திகதி திருவிழா திருப்பலி கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்ற குறித்த முன்னாயத்த கலந்துரையாடலில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார், மடு திருத்தல பரிபாலகர் அருட்தந்தை ஞானப்பிரகாசம் அடிகளார், இராணுவம், பொலிஸார், கடற்படை அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், வைத்தியர்கள், மற்றும் அழைக்கப்பட்ட திணைக்கள தலைவர்களும் கலந்துகொண்டனர்.

(05)

# மட்டக்களப்பு மரப்பாலத்தில் வீதியை விட்டு பாய்ந்த ஜீப்

## மூவர் படுகாயம்



மட்டக்களப்பு மாவட்டத்தின் கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மரப்பாலம்பகுதியில்ஜீப்ஒன்றுவிபத்துக் குள்ளானதில் படுகாயமடைந்த மூவர் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

கண்டியிலிருந்து மட்டக்களப்பு பகுதிக்கு விடுமுறையை கழிக்கவந்த குடும்பம் ஒன்றின் ஜீப் வண்டியே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது ஜீப்பில் பயணித்த மூவர் படுகாயமடைந்த நிலையில் மகாஓயா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளனர்.

குறித்த ஜீப் வண்டியில் ஐந்து பேர் பயணித்த நிலையில் விபத்தில் மூவர் படுகாயமடைந்துள்ளனர் இருவர் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதிகவேகமாக வந்த வாகனம் வேகத்தைக் கட்டுப்படுத்தமுடியாமல் நீண்ட தூரத்திற்குப் பாய்ந்து சென்று விபத்துக்குள்ளாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# அமெரிக்க, இலங்கை, மாலைதீவு கூட்டு இராணுவப் பயிற்சி நிறைவு



அமெரிக்க பசுபிக் விமானப்படை இலங்கை விமானப் படை மற்றும் மாலைதீவு தேசிய பாதுகாப்புப் படை ஆகியவற்றுடன் இணைந்து நடத்திய 'அட்லஸ் ஏஞ்சல்'


' எனும் ஒரு கூட்டு இராணுவப் பயிற்சி வெள்ளிக்கிழமை நிறைவடைந்துள்ளது.

இது குறித்து இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் எக்ஸ் தளத்தில் தெரிவிக்கையில் -

மொன்டானா தேசிய காவலர் படையும், அமெரிக்க பசுபிக் விமானப் படைகளும், இலங்கை விமானப் படை மற்றும் மாலைதீவு தேசிய பாதுகாப்புப்படை ஆகியவற்றுடன் இணைந்து நடத்தப்பட்ட ''அட்லஸ் ஏஞ்சல்' எனும் ஒரு கூட்டு இராணுவப் பயிற்சி நிறைவு வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்தபயிற்சிநடவடிக்கைஇயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனிதர்களால் உருவாக்கப்படும் பேரழிவுகரமான நிகழ்வுகளை எதிர்கொள்வதற்கானதயார்படுத்தல்கள்மற்றும்அவற்றுக்கான பதிலளிப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றை தரமுயர்த்தும். இதன் மூலம்ஒன்றாககூடியாதுகாப்பானமற்றும் நிலையான இந்தோ-பசுபிக் பிராந்தியத்தை பேணிப் பாதுகாப்பதில் அமெரிக்கா உறுதியானநிலைகொண்டுள்ளது என பதிவிட்டுள்ளார்.(05)

# திரியாய்ப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட மக்களின் ஆத்மசாந்தி வேண்டிப் பிரார்த்தனை

திருகோணமலை - திரியாய் பகுதியில் அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டு 39 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு வெள்ளிக்கிழமை திரியாய்



வரத விக்னேஸ்வரர் ஆலயத்தில் விசேட பூசை நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அத்துடன் படுகொலை செய்யப்பட்ட மக்களின் ஆத்ம சாந்தி வேண்டிபிரார்த்தனை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

1985 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 10 ஆம் திகதி திரியாய் அகதி முகாமில் தஞ்சமடைந்திருந்த அப்பாவி பொதுமக்கள் 12 பேரை மக்களின் போக்குவரத்திற்காக ஈடுபட்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸில்ஏற்றிச்சென்றுகஜுவத்தஎன்னும்இடத்தில்வைத்து அவர்கள் அணிந்திருந்த மேற்சட்டையை கழட்டி அவர்களது கைகளை கட்டி ஓடவிட்டு சுட்டு படுகொலைசெய்திருந்தார்கள்எனவும்,1985ஆம்ஆண்டு இன அழிப்பு வன்முறை உச்ச கட்டம் அடைந்திருந்தநிலையில்ஆடிமாதம்5ஆம்திகதிதிரியாய்கிராமத்திற்குள் புகுந்த ஆயுததாரிகளும், சிவில் உடை தரித்த காடையர்களும்திரியாய் கிராமத்தில் உள்ள வீடுகள் அனைத்தையும் தீக்கிரையாக்கியதுடன் சொத்துக்களையும் தீக்கிரையாக்கி அழித்தார்கள்.

இந்நிலையில் திரியாய் கிராம மக்கள் பலர் கிராமத்தைவிட்டுவெளியேறியதுடன்ஏனையோர் திரியாய் தமிழ் மகா வித்தியாலயத்தில்; அகதிகளாகத் தஞ்சம் அடைந்திருந்தார்கள். இவர்கள் மீதே இந்;த வன்முறை சம்பவம் இடம்பெற்றிருந்ததாக மக்கள் தெரிவிக்கின்றனர். (05)




# வானில் பயணித்துக் கொண்டிருந்த ஓமான்பிரஜை சுகவீனத்தால் இறப்பு

காலி, பெந்தோட்டை பகுதியை நோக்கி வானில் பயணித்துக்கொண்டிருந்த ஓமான் பிரஜை ஒருவர் திடீரென சுகவீனமுற்று உயிரிழந்துள்ளார் என ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

அலீம்சபின்ற35வயதுடைய ஓமான் பிரஜையொருவரே உயிரிழந்துள்ளார்.

இவர் நுவரெலியாவிலிருந்து காலி, பெந்தோட்டை பகுதியை நோக்கி வானில் பயணித்துக்கொண்டிருந்தபோது திடீரென சுகவீனமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாாகி 10.08.2024இல் வெளியிடப்பெற்றது